செப்பித தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஸூ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஸூ ஆனி மீ ருஉ வெள்ளிக்கிழமை (19-6-1970) [இலக்கம்

## நாவலர் அநுபந்தம்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

(முன் வளர்ச்சி — 5)

**யதார்த்தவாதி:**

[இராமலிங்கர் பக்தர்; தம் வயமிழப்பவராகலாம பக்திக்கனிகளான அவர் பாடல்கள் கற்றோரையும் மற்றோரையும் வசீகரிப்பவை. இவ்வாறிருந்தும் லௌகிகத்தில் என்ருயினுந் தம் காலில் நின்ருரில்லை. சூழல் நடத்தியது]

i சிதம்பரத்துப் பொதுவில் நாவலரை இராமலிங்கர் நிந்தித்துப் பேசினுர். [இல்லை; பேசுவித்தார்கள்]

நீதிமன்றில், நாவலரைத் தாம் நிந்தித்துப் பேசவில்லை என்று இராமலிங்கர் மறுத்தார் [இல்லை; மறுப்பித்தார்கள்] உலகம் சிரித்தது.

ii. "சுக்கில ஸூ ஆனி உத்தர தரிசன தினத்திலே, சிதம்பரத்துப் பேரம்பலத்திலே, வெகுசனக் கூட்டத்திலே, சுவாமிசன்னிதானத்திலே. சைவப்பிரசாரகரை அவதூருகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசன தினத்திலே, மஞ்சக்குப்பக் கோர்ட்டிலே, வெகுசனக் கூட்டத்திலே, நியாயாதிபதி யெதிரே, தாஞ் சைவப்பிரசாரகரை அவதூருக ஒரு சிறிதும் பேசவில்லை என்று மறுத்து, எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ் வழக்குப் புத்தகம் பேசும்" என்கின்ருர் நாவலர்.

iii. தம் வினையும் பிற வினையும் தம்பால நிகழ்கின்ருர் இராமலிங்கர். இருவினையும் தம்பால் நிகழ்கின்ற பரிதாப நிலையை உற்று நோக்கியதும் என்ன செய்தார் நாவலர்.

iv "இனி வழக்கில்லையென்ருர். இன்று போய் நாளை வா"

v. a இராவணன் நிராயுதபாணியாய் நாணி, "நிறம் கரிந்திட நிலம்விரலிளைத்திட நின்ருன்; நிலம் நோக்கி நின்ருன்.

b. இராமன் நாணியைத் தளர்த்தி விலலை நிலத்தி ஊன்றி, பரிதாப நிலையை எதிட்டுப் பாராதே கூசி, 'போய் வா' என்ருன்.

"இன்று போய்ப் போர்க்கு நாளை வா என நல்கினன் நாகிளங் கமுகில், வாளை தாவுறு கோசலநாடுடை வள்ளல்"

இராமன் வள்ளல் ஆயினுன்.

vi. இராமலிங்கர் நாணிக் கண் புதைக்க, வழக்கை வீடு செய்து, நாவலர் வள்ளல் ஆயினர்.

vii. a. இராவணன் நிலம் நோக்கியவாறே யாரையும் நோக்காதே மனசில் மற்றெரு பொருளைச் சுமந்து கொண்டு, ஸ்ரீலங்கா எனப் பெயரிய தன்தனித்த மாளிகையுட் புகுந்தான்.

தூதுசென்ற நளன் இருதயத்தினின்றும் தமையந்தி குடிபோயது போல, இராவணன் இருதயத்தினின்றும் சீதைகுடிபோய் விட்டாள்; இராமன் குடிகொண்டுவிட்டான்.

b. இராமன் முன்னிலையில்,

"நாயெனத் தகுது மன்றே காமனும் நாமு மெல்லாம்" என்று புகமுவாஞயினுன் இராவணன்.

c. வழக்குக்குப் பின், உலகை நோக்கார் - ஊண் துறந்தார் - "என் சீடர் மிகக் கொடியர்" என்ருர்; அறையொன்றுட் புகுந்து ஏகாந்தமுற்ருர் இராமலிங்கர். அவர் இருதயத்தில் யார் குடியிருப்பாரோ? சீடரை முனிந்தவர், அவரினின்றும் விடுதலையளித தாரை முனிந்ததுமுண்டா?

d "முனியுந் தமபியும்
போயமுறையாற் றமக்
கிளிய பள்ளிக
ளெய்திய பின்னிருட்
கனியுமபோலபவன்
கங்குலுந் திங்களுய
தனியுந் தரனுமத்
தையலு மாயினுன்"

என்கின்ருர் கம்பர்.

முனியையும் தம்பியையும விலகி, ஓரறையுட் பள்ளிசெய்த இராமனைத் தனிமை முதலியவைகளோடு கூட்டிப் பன்மை செய்துவிட்டான் கம்பன்.

c கற்பனை வல்லாருளராயின், இராமலிங்கரின் ஏகாந்த அறையுள் யார் யாரைக் காண்பாரோ?

இராவணனிதயத்தில் இராமன் போல, இராமலிங்கரிருதயத்தில் யாரிருப்பாரோ? வீடு செய்தாரை மறக்கலுமாமே!

viii. a 'இவண் இருத்தி' 'நடத்தலரிதாகும் நெறி' 'கல்லரக்கும் கடுமையகாடு' என்கின்ருன் இராமன்; 'நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு' என்கின்ருள் சீதை.

b 'எழுகென எழுந்தாய் என் செய்தனை, நீ உடன் வர மறுத்திருக்கலாமே, என்று இரங்குகின்ருன் கோவலன்.

"போற்ரு ஒழுக்கம்
புரிந்தோய யாவதும்
மாற்ரு உள்ள
வாழ்க்கையே ஞதலின்
எற றெழுந்தனன்"

என்கின்ருள் கண்ணகி.

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குற்றநீ குணங்கணீ
கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ
தொடர்ந் திலங்கு சோதிநீ
கற்ற நூற் கருத்துநீ
யருத்த மின்ப மென்றிவை
முற்றநீ புகழ்ந்து முன்னுரைப்ப
தென் முகம்மனே.

திருச்சிற்றம்பலம்

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

### மகா அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம்

திருக்கேதீச்சரத்தில் 23-6-70 செவ்வாய்க்கிழமை கௌரியம்பாள் சமேத கேதீச்சரநாதருக்கு அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். பகல் அபிஷேக ஆராதனைகள் நிகழும். இரவு, அளவெட்டி திரு சி. வ்ஞ சித்தம்பி அவர்களுடைய கதாப் பிரசங்கம் நிகழ்ந்த பின்பு அலங்கார உற்சவம் நடைபெறும்.

### தருமபுரம் ஆதீனத்தில் "சிவ கவசம்" நூல் வெளியீட்டு விழா

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகள் ஆதீனக கல்லூரிப் பேராசிரியர், மகாவித்துவான், முதுபெரும் புலவர், சித்தாந்தக் கலைமணி திரு சி அருணைவடிவேல் முதலியாரைக்கொண்டு, "சிவ கவசம்" என்ற நூலை தொகுத்து அச்சிட்டு குருபூசையின் நினைவாக, 612 ஆவது மலராக வெளியீடு செய்தார்கள். ந. நி)

---

சிதம்பரத்தில்

## சேக்கிழார் நாயனுர் வீதியுலா வருங் காட்சி

### பெரியபுராண அரங்கேற்றத்தின்பின் நிகழ்ந்த முதல் வீதியுலா

திலைபைம்பதியில் (சிதம்பரத்தில்) ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகளின் திருக்குளத்தின் வடகரையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வித்தியாசாலையின் தர்மங்களின் மூலம் நிர்வாகம் செய்துகொண்டு வரும் ஸ்ரீ சேக்கிழார் பெருமான் திருக்கோவிலில் வைகாசி 25ம் நாள் பூச நட்சத்திரத்தன்று காலை ஸ்ரீ சேக்கிழார்பெருமானின் குருபூசை விழா விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனையுடன் நடைபெற்று அன்று மாலை வித்தியாசாலை நற்பொறுப்பாளராண திரு தி க. இராசேஸ்வரனின் நன்முயற்சியால் முதன்முறையாக ஸ்ரீ சேக்கிழார் பெருமானின் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது

ஸ்ரீ சேக்கிழார் அருளிய "பெரியபுராணம்" அரங்கேற்றம் செய்துள்ள இன்றுதான் ஸ்ரீசேக்கிழாரின் வீதியுலாக் காட்சி நடைபெற்றது குறிப்பிடத் தக்கதாகும்.

-(எமது சிதம்பரம் நிருபர்)
திரு. மா. பாலசுப்பிரமணியன்

### வடமாநில வித்தியாதிகாரி

திரு. V. சங்கரலிங்கம் அவர்கள் வடமாநில வித்தியாதிகாரியாக நியமிக்கப்ப டுள்ளார். திரு S. தணிகாசலம் அவர்கள் கொழும்பு கல்வி மந்திரிக் கந்தோருக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நல்லூர் வட்டாரத்

### தமிழத திறமைப் போட்டி -1970

ஷெ போட்டி இம்மாதம் 16, 17-6-70 ஆம நாட்களில் பரமேஸ்வரக கல்லூரி மண்டபததில வட்டாரக கல்வியதகாரி திரு. M ...ணரகனம அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பரதிபண்ணல், சொல்வமமுதல், கட்டுரை வதபபு, உரதது வாசிததல், சொற்பொழிவாற்றல், பாவோதல், நாடகம் முதலியபிரிவுகளில் போட்டி நடத்தப்பட்டது.

### அருணகிரிநாதர் விழா

யாழ் வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத்தினரால் அருணகிரி நாதர் விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

—0—

### சைவப்பேருரைகள்

வண்ணை, வைத்தீஸ்வரன் கோவிலில், யாழ் மெய்கண்டார் கழகத்தின் ஆதரவில், 23-6-70 செவ்வாய்க்கிழமை 24-6-70 புதன்கிழமை, 25-6-70 வியாழக்கிழமை ஆகியநாட்களில் "சைவசித்தாந்தத் தெளிவு" 'சாத்திரமும் தோத்திரமும்" "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்னும் பொருள்களில், இரவு 7-15மணிதொடக்கம் 8-15 மணி வரை, வித்துவான் சைவப்புலவர் மு கம்பிராசா M. O. L. அவர்கள் [தமிழ் ஆராய்ச்சித்துறை, அண்ணமலைப் பல்கலைக் கழகம்.] விரிவுரை நிகழ்த்துவார்கள்.

### வரவேற்பு

தபால் தந்திப் போக்குவரத்து மந்திரி திரு செ. குமாரசூரியர் அவர்கள 25ம் 26ம் நாட்களில் யாழ்ப்பாணத்தில தங்குவார். ஒலிபரப்பு உதவி மந்திரி ஜனாப் ஏ. எல். மஜீதும நியமன எம் பீ. ஜனாப் எ அஸீசும் சேர்ந்து வருகின்ருர்கள். யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் இவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.

### குடியேற்றத் திட்டம்

கிளிநொச்சித் தொகுதியில் கிட்டத்தட்ட 2000 ஏக்கர் காட்டு நிலத்தில் புதிய குடியேற்றத் திட்டம் அமைக்கப்படவிருக்கின்றது. 300 ஏக்கர் நிலம் நடுத்தர வகுப்பினருக்கும், சாதாரண மக்களுக்கும் வழங்கப்படும். 125 ஏக்கர் நிலத்தில் வீடமைப்புத் திட்டம் அமைக்கப்படும்.



பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

---

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE SAIVAPRAKSA PRESS.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

சாதாரண ஆனி மீ ௫-உ வெள்ளிக்கிழமை [1970]

## திண்ணபுரம் சுந்தரேசுவரர் கோவில்

காரைநகர் திண்ணபுரத்திலுள்ள இவ்வாலயம் தோன்றுவதற்கு மூலகாரணராயுள்ள சிவ பக்தர்கள் இருவர். ஒருவர் ஆண்டியென்று அழைக்கப்படும் மெய்யடியார். மற்றையவர் அம்பலவி முருகர். இவர்களுடைய பக்தியினால் திண்ணபுரத்தில் முதலில் வைரவர் கோவிலும், பின்பு ஐயனார்கோவிலும் மூன்றாவதாக சிவன்கோவிலும் தோன்றின. சிவன்கோவிலைத் தோற்றுவித்த சிவனடியார் அம்பலவி முருகர் வாழ்க்கை வரலாறு அற்புதமானது. அவருடைய பக்தியும் வைராக்கியமுமே இத்திண்ணபுரத்தைச் சிவபுரமாக்கியது. சுண்ணாம்புக் கற்களாலும் கட்டப்பட்ட சிவாலயத்தை காரைநகரிலுள்ள அன்பர்கள் பெருந்தொகை நிதிசெலவு செய்து கருங்கற்றிருப்பணியாற் சமைத்துள்ளார்கள் அவர்களுடைய சிவபக்தியும் ஆர்வமும் பாராட்டற்குரியன. ஆனி உகூ-உ வெள்ளிக்கிழமை நிகழும் சுப முகூர்த்தத்தில் ஷெ கோவிற் கும்பாபிஷேகம் நடைபெறுமென அறிகின்றோம்.

"சிவாலயத் திருப்பணிகளுக்குப் பொருள்கொடுப்பவர்களும், அப்பொருளை வாங்கிச் சிவாலயத் திருப்பணிகளைச் செய்பவர்களும் முத்தியையடைவார்கள்."

### சைவ சமயநெறி

திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடனீ வார்பெறுக வீடு
உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்"

—ஆறுமுகநாவலர்.

ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணமலை, கீரிமலை நகுலேஸ்வரன்கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்களைப்போன்று இவ்வாலயமும் அடியார்களுக்கு வினைகளைப் போக்கி வீடுபேற்றினை உதவக்கூடிய சிவதலமாகவுள்ளது. இப்பொழுது கோயிற் பூசகராகவிருக்கும் பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் குமாரர் மங்களேஸ்வரக் குருக்கள் கோவில் நித்திய நைமித்திகங்களை வேதாகம முறைப்படி புரிந்து வருகின்றார்கள்.

சைவமக்கள் யாவரும் ஷெ தலத்துக்கு யாத்திரை செய்து சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேசுரப் பெருமானுடைய அனுக்கிரகத்தை யடைவார்களாக.

## நாவலர் அநுபந்தம்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

'கல்லென்றாலும் கணவன்' என்பார்கள். அந்த முறையில், உன் மன்றாட்டத்தை ஏற்று உன்னுடன் வந்து தொலைந்தேன், என்கின்றாள் கண்ணகி,

c சீதை மந்தோதரி பெற்றவள்; ஈழத்தாள்.

கண்ணகி பாண்டிநாட்டைச் சாம்பர் செய்தவள்; சோழத்தாள்.

d. பெண்டிரிருவருக்கும் பேதம் தெரிந்தக்கால், "கம்பநாடன் கவிதையிற்போற்,

கற்றோர்க்கு இதயம் (ஒலம்பில்.......) .........."?

e கம்பரிற் பயின்ற கற்பனைச் செல்வர்கள், 'முனியுந் தம்பியும்' என்ற பாடல் தெரிந்தவர்கள், இராவணனின் இதயம் கண்டவர்கள்,

இராமலிங்கரின் தனிமையில் யார் யார் இருப்பாரென்று கற்பனை செய்து உண்மை காண்பாராக.

f நாவலர் தாமே கைநெகிழ்ந்து விட்டவழக்கை, 'நாவலர் நிரூபிக்கவில்லை; அதனாலே தள்ளுப்பட்டது' என்று கற்பனை செய்வது,

இராமன் சந்தர்ப்பத்தை உபயோகியாது வாளா நின்றான்; பின்னை இராவணன் மிக்க பெரியதொரு, "வென்றியோ டிலங்கை புக்கான்" என்று கற்பனை செய்வதற்குச் சமம். அவ்வாறு செய்வார்க்குச் சொல்லத்தக்க ஒரே ஒரு குறள்,

"பேராண்மை யென்ப
தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு"

என்பதாம்.

முற்றும்.

—o—

சேயர் கெஞ்சம்

## பெரியபுராணம் நூல் வெளியீடு

தங்கள் 5-6-70 இந்து சாதனத்தில் வெளிவந்த "பெரியபுராணத்தை ஈழத்தில்அச்சேற்றுதல்வேண்டும்" என்ற ஆசிரியர் தலையங்கத்தைக்கருத்துடன் படித்தேன் அதில் "இந் நூலைப் பிழையின்றி நல்லதாளில் அச்சிட்டு மக்களுக்கு விற்பனைக்கு வழங்க சேக்கிழார் மன்றம், ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் நாவலர் சபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, இந்து மாமன்றம் போன்ற தாபனங்கள் முன்வருமா?" என்ற வினாவையும் எழுப்பியுள்ளீர்கள்.

யாழ்ப்பாணத்திலே மிக அடக்கமாகவும் அமைதியாகவும தமிழ்நூல் வெளியீட்டுத் துறையில் பணியாற்றி வரும் ஒரு நிறுவனம் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகமாகும். யாழ்ப்பாணத்தவர்களால் எழுதி வெளியிடப்பட்டு இப்போ மறைந்துள்ள தமிழ் நூல்களை வெளியிட்டு அவற்றைப் பாதுகாப்பதையும், ஏனைய தமிழ் இலக்கியங்களை வெளியிட்டு இலங்கை அரசினரின் இறக்குமதி, அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளால் கஷ்டப்படும மக்களுக்கு அவற்றை வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டதே இக் கழகமாகும்.

இக் கழகம் தன் முதற் பணியாக "சேக்கிழார் நாயனார்புராணத்தையே 1967-ல் வெளியிட்டது. அந் நூலில் "எங்கள் அடுத்த வெயியீடுகள்" என்ற விளம்பரத்தில் "பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் - ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையுடன்" என்றிருப்பதைக் காணலாம். எனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்னரேயே பெரிய புராணம் ஈழத்தில் அச்சிடப்படவேண்டுமென்ற கருத்தை நாங்கள் கொண்டிருந்தோம்.

எங்கள் கருத்தை அப்போ அறிந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தாம் அரிதிற் பேணிவைத்திருந்த ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரைப் பிரதிகளை எமக்கு அனுப்பி ஆசி நல்கினார்கள். மேலும் இந்நூல்கள் அச்சாகும் காலத்தாம் வேண்டிய உதவிகள் செய்வதற்கும் முன்வந்தார்கள்.

இப்பெரிய புராண ஆறுமுகத் தம்பிரான் உரை நூற்பிரதிகள் மடிந்தும் ஒடிந்தும் இருந்தமையால் அச்சுக்கோப்போரிடம கொடுக்க முடியாதபடியால் அவற்றை பிரதிசெய்ய வேண்டுமென எண்ணி, அப்பணியை இப்போது முடித்துவிட்டோம்.

இந் நூல் முழுவதையும் அச்சேற்றுவதற்கு ருபா 30,000 ஆகும் எனக் கருதப்படுவதால், அவ்வேலை தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தாங்கள் தங்கள் கட்டுரையில்குறிப்பிட்ட நான்கு சபைகளிலிருந்து சிறு அளவிலேனும் பணஉதவி பெற்றுத் தர தாங்கள் முயற்சி எடுத்து வெற்றி பெற்றால், பெரியபுராணம் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளின் உரையோடு ஓராண்டு காலத்தில் வெளிவரும் என நாங்கள் உறுதிகூறுவோம்.

தமிழ்நாட்டில் திரு C. K. சுப்பிரமணிய முதலியாரின் உரைகள் வெளிவருவதற்கு சென்னை அரசாங்கம், சென்னை பல்கலைக் கழகம், தருமபுரம் போன்ற மடங்கள். சேர். முத்தையாச் செட்டியார் போன்ற பிரபுக்கள் ஆயிரமாயிரமாக வாரிவழங்கிய படியால் அவை விரைவாகவும், அழகாகவும் வெளிவந்தன. எந்தவொரு பெரும்பணியும் பிரபுக்களின் ஆதரவு இல்லாமல் நிறைவெய்தாது.

பெரியபுராண வெளியீட்டுக்கு தாங்களும் தங்கள் பத்திரிகையும் உதவி செய்ய முன்வந்தால் நூல் விரைவில் வெளிவரும்.

நாங்கள் இது வரை (1) சேக்கிழார் நாயனார் புராணம் (2) திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள் (3) காசி வாசி செந்திநாதையரின் கந்தபுராண நவநீதம், (4) சிவபுராணம், வித்துவான் க. சுப்பையபிள்ளை உரை (5) திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம் - ஆறுமுகத் தம்பிரானுரை (6) அபிராமியந்தாதி - ம க. வேற்பிள்ளை உரை முதலிய நூல்களை வெளியிட்டு, இப்போ (1) சிவஞானசித்தியார் (சுபக்கம்) திரு. மு. திருவிளங்க முரை (2) ராவ் பகதூர் சி. வை தாமோதரம்பிள்ளை B. A B. L. அவர்கள் தாம் பதிப்பித்த நூல்களுக் கெழுதிய முகவுரைகளின் தொகுப்பாகிய "தாமோதரம்", ஆகிய நூல்களை அச்சிற் பதிப்பித்துக் கொண்டிருக்கிறோம. இவற்றைத் தொடர்ந்து திரு. மு திருவிளங்கம் உரையோடு கந்தரலங்காரத்தையும் திருப்புகழ்த்திரட்டையும் வெளியிட இருக்கிறோம்.

இப் பணிகளுக் கெல்லாம் பணவுதவியோடு தமிழன்பர்களின் ஆசியும் ஆதரவும் வேண்டும்.

சி சிவகுருநாதன்,
தலைவர்:
யாழ். கூட். தமிழ்நூற் பதிப்பு விற்பனைக்கழகம்.
411/1 காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம், 14-6-70.

## நுண்கலைச் செம்மல்

[நாயன்மார்கட்டு, வைத்திய கலாநிதி க. குகநாகதாசன் அவர்கள் பிரிவு குறித்து ஷெ யூர் மகேஸ்வரி வித்தியசாலையில் 29-5-70ல் நடந்த ஆசிரியர் - மாணவர் இரங்கற் கூட்டத்தில் தலைமையாசிரியர் திரு. ஆ. இளையதம்பி அவர்கள் தலைமை வகித்து நிகழ்த்திய இரங்கல் உரை:]

யாழ் - நாயன்மார்கட்டு, வைத்திய கலாநிதி திரு. க. குகநாகதாசன் அவர்கள் எமது உற்ற நண்பர், பேரன்புடையவர், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை முன்னாள் தலைமையாசிரியர் திரு. வே. சந்தையா அவர்களின் அருந்தவப் புதல்வன்.

அன்னார் சாந்தமே உருவானவர். அன்பு, அருள், அடக்கம், பொறுமை, இன்சொல் இவற்றால் தந்தையினும் மிக்க பண்புடைச் செம்மல். தம்மொடு பழகும் எவரையும் அன்பினாற் பிணிக்கும் பெருந்தகையாளர் தீமைக்கொதுங்கி, நன்மை கடைப்பிடிக்கும் இலட்சிய வாதி, எவர் மனத்தையும் இலகுவில் வசீகரிக்கும் முகபாவம் மிக்க உத்தமர் எத்தகைய சிக்கலான பிரச்சனையையும் இலகுவில் அணுகிச் சுமுகமாகத் தீர்க்கும இயற்கை விவேகமுடைய சிந்தனைச் செல்வர், அரசினரின் பெருமதிப்பையும் மக்களின் பேரன்பையும் பெற்று நாட்டிற்கோர் மணியென வாழ்ந்த உத்தமர்.

தம்மை வந்தடைந்த நோயாளரின் நோய் நாடி மருந்தளிக்கும் நுண்கலைச் செம்மல். பிணியாளரை உயிராகவும் தம்மை உடம்பாகவும் கருதிப் பேரன்புடன் பணிபுரிந்த பெருந்தகையாளர். செயலாலும், சொல்லாலும், பார்வையாலும் எவரையும் நோவம் பண்ணாத மாசற்ற உள்ளத்தினர். புகழையும் பொருளையும் விரும்பாப் புண்ணியன். சத் கருமங்களுக்கு உள்ளன்போடு வாரிவழங்கிய வள்ளன்மைமிக்க அண்ணல். ஐயா எனத் தம்மை வந்தணைந்தோரின் அல்லல் தீர்த்து அவருள்ளத்தை அன்பினாற் குளிரப் பண்ணும் வைத்திய கலாநிதி அவர்களின் மறைவு நாட்டுக்கோர் பேரிழப்பாகும்.

நாயன்மார்கட்டு பிரபல சோதிடர் திருஞானசம்பந்தர் அவர்களின் அருமை மகளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இல்லறமியற்றி நலம் வாய்ந்த மக்கட் செல்வத்தைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்.

நடுவூரிற் பழுத்த நன்மரம்போல வாழ்ந்த வைத்திய கலாநிதி அவர்கள் எவரும் எதிர்பாராத வகையில் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்கள். பெற்றதாய் மறந்தாலும் தந்தை மறந்தாலும் மனையாள், மக்கள் சுற்றம் தான் மறந்தாலும் என் வாழ்வில் அவரை ஒருபோதும் மறவேன்; நாடும் மறவாது.

இப்பிரிவு அறிவுடையோராலும் ஆற்றுந்தரமன்று. அவர்களின் பிரிவால் துன்புறும் குடும்பத்துக்கும் பிள்ளைகளுக்கும் சுற்றத்தவருக்கும் ஆறுதலளிக்க முடியாது. இயற்கை எய்துதல் எல்லோர்க்கும் இயல்பு ஆதலின் அதனை மனதிற்கொண்டு ஆறுதலடைவோமாக. வைத்திய கலாநிதி அவர்களின் ஆன்மா சாந்தியுறுக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 5112
காகேசு வேலுப்பிள்ளை
சண்டிலிப்பாய் —வழக்காளி
எதிராக
1. வைரமுத்து இராமலிங்கமும்
2. பெண் மங்களமும்
இருவரும் மண்டைதீவு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 5112 - ஆம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்தகோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970 ஆம் ஞூ ஆவணி மாதம் 15-ஆம் திகதி (15-8-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக காணிக குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6195/-ம் 27-9-62 தொடக்கம் 21-9-65 வரைக்கும் ருபா 4200-க்கு 15 வித வட்டியும் அதனபின் முழுதசொகைக் கும் இறக்கும்வரை 5 வித வட்டியும் ரூபா 2300 கழிககவும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி அல்லைப் பிட்டி கோவிற்பற்று, மண்டை தீவுஇறை "காவன் கச்சி" நிலப் பரப்பு 15 (பதினைந்து) கிணறுக ளும், இளம் முது பனைகளும் எல்லை கிழக்கு இளையகம்பி திரு நீலகண்டரின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு அருளம்பலம் பெண் கனகம்மாவின் உரிமைக் காரரின் ஆதனமும், ஸ்ரீ சுப்பிர மணியசுவாமி கோவில் முகப்பு வடலும், மேற்கு இரண்டாம் எதிரியின் ஆதனமும் திலலையம் பலம் வீரசிங்கத்தின் ஆதனமும், தெற்கு கடற்கரை, இதில் சொ லிலாக நிலப்பரப்பு பத்து (10) அல்லது 2/3 பங்கு, பதிவு இலக்கம் C 28152

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales
"வேல்பதி" புத்தூர்
10-6-70. (எம். 103, 19-6-7

## COMMISSION SALE
### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10275

புலோலி மேற்கு
1. இராசரத்தினம் சபாரத்தினம்
2. பெண் சந்திரதிலகம்
—வழக்காளிகள்
எதிராக
புலோலி மேற்கு
ஆழ்வான் செல்லத்தம்பி
— எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1970-ஆம் ஞூ ஆடி மாதம் 10-ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-00 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவி ந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை மண்கொண்டதாழ்வு இதற்குப் பருத்தித்துறை டிஸ்திறிக கோட்டின் 3527 ஆம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்ட 1950 -ஆம் ஆ பங்குனி மீ 1 -ஆம் திகதியைக் கொண்ட 1070 ஆம் இலகைப் படத்தின்படி நிலப் பரப்பு 6 குளி 11 22/32. இதில் குறித்த படத்தல் 3 -ஆம் நம்பர் துண்டுக்கு நிலப் பரப்பு 2 குளி 1, 4/64 வீடு, கொட்டில்கள், கிணறு, பனைகளும் எல்லை கிழக்கு கண பதி ககரனுக்கும் மறுபேரக்குமுடைய வாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு குறித்த படத்தில் 5ஆம் நம்பர் துண்டு. தெற்கு குறித்த படத்தில் 4 ஆம் நம்பர் துண்டு இவ்வெல்லைக்குட்பட்ட வைகள் முழுவதும்.

| | |
|---|---|
| தீர்வைத்தொகை | 3660-00 |
| ரூபா 3000க்கு 22-11-68 | |
| தொடக்கம் 21-3-69 | |
| வரை 8 வித வட்டி | 80-00 |
| முழுத்தொகை ரூபா 374ப க்கு 22-3 69 | |
| தொடக்கம் 3-5-1970 | |
| வரை 5 வித வட்டி | 203-00 |
| செலவு | 247-15 |
| மொத்தம் | 4190-15 |

V. M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
3-6-70 எம். 106 19 6-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காசிநாதர் கனகசபை, காரைதீவு வடக்கு —வழக்காளி
வழ: இல M. B. 10133 எதிராக
கதிரன் ஆறுமுகத்தான், காரைதீவு வடக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 10133-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970- ஆம் ஞூ ஆடி (ஜூலை) மீ 29-ஆம் திகதி (29—7—1970) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1821-66 சதமும் 8-7-68 தொடக்கம் 29-10-68 வரைக்கும் ரூபாய் 1120/- க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 345-91 சதமும் இதில் ரூபாய் 500/- குறைக்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி, காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலை இறை 'சடையாளி" வகுச் செய்கை நிலப்பரப்பு 4ம 9 குளியும் அளக்கப்பட்டபடி 6 பரப்பும் 9 குளியும் வடக்குப் பக்கமாக விலைப்பட்ட 2 பரப்பும் 9 குளியும் கழித்து மிகுதியாக இருக்கும் பரப்பு 4ம் அதிலுள்ள பனைகளும், பனை வடலிகளும் செய்பயிர்களும் வான்பயிர்களும் எல்லை கிழக்கு: வைரவன் நாகமுத்தனின் காணி, வடக்கு: முருகன் செல்லனின் காணி, மேற்கு: ருேட்டு, தெற்கு: கைஒழுங்கை இது முழுவதும் (333/185 ன் கீழ்பதியப்பட்டது)

க. சரவணமுத்து
173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 16-5-70 எம். 78 19-6-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

அனலைதீவு. அருணசலம் பொன்னம்பலம் —வழக்காளி
இல: M B 10733 எதிராக
நடராஜாஐயர் நாகேஸ்வர ஐயர் தானுகவும் தனது காலஞ்சென்ற பெண் ஜெகதாம்பாளின் ஆதனங்களின் தத்துவ பிரதிநிதியாகவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10733ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞூ ஆடிமாதம் 4-ம் திகதி (4-7-70) சனிக்கிழமை முற்பகல 11-00 மணி மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 4000/-மும் 19-9-67 தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 368-10 மேலதிகமான செலவு ரூபாய் 100/- இதில் ரூபாய் 1000/- கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு அனலைதீவு கோவிற்பற்று அனலைதீவிறை "சிம்பன திடலும் பெரிய புலமும்" பர. நில. இலா. 7 — 0 கல்வீடு, கிணறு, செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு: பிள்ளையார் கோவிலுக்குரிய வாதனம், வடக்கு சின்னையா நடராஜா ஐயருக்குரிய ஆதனம், மேற்கு வேலாயுதம் பெண் வள்ளியம்மைக்கும் சின்னத்தம்பி கந்தையாவுக்குமுரியவாதனம், தெற்கு வேலாயுதம் பெண் வள்ளியம்மைக்கும் மற்றவர்களுக்குமுரிய வாதனம் மேற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் மேற்சொல்லப்பட்ட காணிக்குரிய கிணற்றுப் பங்கும்.

133 பருத்தித்துறை ருேட்டு, செ. விசாகரெத்தினம்,
நல்லூர், யாழ்ப்பாணம். கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
16—6—70 எம். 112 19—6—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

பாண்டியன்தாழ்வு. சுண்டிக்குளி
1. கனகசபை சின்னத்துரை கைம்பெண் புஸ்பராசமணி
இல: M B. 6843 எதிராக — வழக்காளி
வண்ணர்பண்ணை மேற்கு.
1. தம்பு சோமசுந்தரமும் 2. அவரின் மனைவி சிவபாக்கியம்
3. கதிரவேலு நாகலிங்கம். வண்ணர்பண்ணை கிழக்கு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6843-ஆம் இலக்க வழக்கில் எனககுக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞூ ஆடி மீ 31-ஆம் திகதி (31-7-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 0-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 4774/-ம், 29 7-64 தொடக்கம் 5-2-69 வரைக்கும் 3000/- ரூபாவிற்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 437-50 இதில் ரூபா 1817ம் கோட்டுச் செலவான ரூபா 100/-ம் கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு வண்ணர்பண்ணை கோவிற்பற்று வண்ணர்பண்ணை வடகிழக்கு வண்ணர்பண்ணை இறை "வல்லூறு வாயடி மணற்காடு பிரமருபபிள்ளை புலமும்" கூலன் தட்டான் வைலன் வழவும் நிலப்பரப்பு 2ம ½ குளியும இதற்குள் புதிதாக கட்டியகல் வீடும், வான்பயிர் செய்பயிர்களும் வாழைகளும், எல்லை கிழக்கு வடக்கு, மேற்கு ஒழுங்கையும், தெற்கு கந்தையா சதாசிவத்தினதும் பெண் நாகம்மாவினதும் ஆதனம்.

"வடிவேல் உதயம்" சி. ஆ. த வடிவேலு J. P.
காங்கேசன் துறை வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில். 15-6-70 எம். 114 19—6—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

விசுசித்தம்பி முருகேசு பரமநாதன்
வலந்தலை, காரைநகர் வடக்கு. — வழக்காளி
வழ: M. B. 8949 எதிராக
1 வேலு காசிப்பிள்ளையும் பெண்
2 இராசட்மாவும் அரசடி ருேட். வண்ணர்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம். — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8949-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1970-ஆம ஞூ ஆடி மீ 8-ஆம் திகதி (8-7-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4525/-ம், 19-3-67 தொடக்கம் 8-8-67 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 269-75

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணர்பண்ணை வடகிழக்கிறை "கோவில் வயல் அல்லது அம்மன் கோவில் வயல்" நில. பர. 4 குளி 14 நடுப்புறமாக பிரிக்கப்பட்ட நில. பர. 1 குளி 10, 2/3 இந்த நில பர 1 குளி 10, 2/3ம், வீடும், பயிர்வகைகளும், இந்தக் காணியின் வடக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும்; கிழக்கெல்லை ஓரமாக வழியும், வாய்க்காலும், எல்லை கிழக்கு: தண்ணீர் வாய்க்கால், வடக்கு: சின்னத்தம்பி சின்னையா பெண் இரத்தினத்தின் ஆதனம், மேற்கு: ஒழுங்கை, தெற்கு: சின்னத்துரை பெண் சின்னக்கிளியின் ஆதனம்.

பதிவு இலக்கம்: D. 273/6

2 ஷை வண்ணர்பண்ணை வடக்கிறை "கோவில் வயல் அல்லது அம்மன்கோவில் வயல்" நில. பர. 1 குளி 16 எல்லை கிழக்கு கோவிலுக்குரிய ஆதனமும், சின்னத்தம்பி சுப்பிரமணியத்தினது தனமும், மேற்சொல்லிய மூதலாமாதனமும், வடக்கு: இளையவன் சின்னத்தம்பிக்கும் பெண் ஆச்சிமுத்துவிற்குமுரிய ஆதனம் மேற்கு: இராமுப்பிள்ளை திருஞானசம்பந்தருக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு: ருேட்டு. இந்தக் குறித்த ஆதனம் பிரிவிடுதல் செய்யக்கூடாது ஆனல் ஒழுங்கையாகப் பாவிக்க வேண்டும். பதிவிலக்கம்: D 273/6

239, ஆஸ்பத்திரிவீதி, இ. சு. தர்மரத்தினம்
யாழ்ப்பாணம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 109 19-6-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சமகே நீச்சாட் பெரேரா 426, கே. கே எஸ். ருேட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம். தற்பொழுது. 119/1 2, வதிகெதர ருேட், மகரகம.
இல. M. B. 9957 எதிராக — வழக்காளி
1 கந்தையா இரத்தினசபாபதியும் மனைவி
2 இராஜலட்சுமி, கொழும்புததுறை, யாழ்ப்பாணம். தற்பொழுது 54, டீல் பிளேஸ், கொழும்பு. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9957-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஞூ யூலை மீ 16ம் உ (16-7-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 12,700ம், 7-5-68 தொடக்கம் 1-10-69 வரைக்கும் ரூபா 9000/-க்கு 10வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 562-77

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பிரிவு சுண்டிக்குளிக் கோவிற்பற்று கொழும்புத்துறை இறை "திடலிற் புலம்" நிலப்பரப்பு 6ம் குளி 12ம் இதில் மேற்கிலுள்ள பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 3ம் இத்துடன் வான்பயிர் வளர்பயிர்களும் வீடும். எல்லைகள்:- கிழக்கு - எஞ்சிய ஆதனம் கந்தையாபிள்ளை சபாநடேசருக்கும் அவரது மனைவி இராஜேஸ்வரிக்கும் சேர்ந்தது, வடக்கு - ஒழுங்கை. மேற்கு - வாய்க்காலும் ஒழுங்கையும், தெற்கு - அப்பாக்குட்டி நல்லையாவின் ஆதனமும் இதடங்கலும், கிழக்கு எல்லையிலுள்ள கிணற்றில் பாவிப்புரிமையும் மேற்கூறப்பட்ட நிலப்பரப்பு 3ம, அரியாலையில் வசிக்கும் நில அளவையாளர் சீ, இராசகாரியரினுல் வரையப்பட்ட 1958ம் ஞூ ஆடி மீ 15-ம் திகதி 116-ம் இலக்கப் படத்தில் 1-ம் துண்டென்று விபரிக்கப்பட்டிருப்பதும், யாழ்ப்பாணம் மாநகர சுவாமியார் வீதி, வரிமதிப்பு இல. 54/10ம் உடையதாயுள்ளது.

க, சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
நாகேந்திரமடம், மதிப்பாளரும்
வட்டுக்கோட்டை. 13-6-70, M 105. 19—6—70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் இல: 24, முதலாம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் "லிங்கம்ஸ் போன் புரேக்கோஸ்" என்னும விலாசத்தில் அடைவு பிடித்த க. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1967ம ஞூ தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1969ம் வைகாசி மீ 31 ம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும நகைகள் யாவும் என்னுல் 1970-ம் ஞூ ஆவணி மீ 5-ம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் ஷை விலாசத்தில் நடக்கும் அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

காரைநகர் வை. ஏரம்பமூர்த்தி
1970-ஆம் ஞூ ஆனிமீ 9-ம் திகதி. ஏல விற்பனையாளரும்,
எம். 98 12—6—70 விலைமதிப்பாளரும்,
Commissioner of Sales & Valuer.

## கனடாவில்

1969ஞு யூலைமீ நிறைவேறிய

## மொழிச்சட்டம்

மொழிகளின் அந்தஸ்து பற்றிய உறுதியுரை:

ஆங்கில மொழியும், பிரான்சிய மொழியும் எல்லாவிதமான பாராளுமன்ற தேவைகட்கும், கனடாவில் அரசாங்க தேவை கட்கும்ரிய கனேடிய அரசாங்க மொழி வசதிகள் என்பன பாராளுமன்ற ஸ்தாபனங்கள், கனடாவின் அரசாங்க நடவடிக்கைகள் ஆகியவற்றில் உண்டு.

கனடாவின் பாராளுமன்றம், அல்லது கனடாவின் அரசாங்கம் அல்லது நீதி பரிபாலன ஸ்தாபனங்கள் அல்லது முடிக்குரிய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் எல்லாவிதமான நடவடிக்கைகளும், அவை வெளியிடும் அல்லது விநியோகிக்கும் பொது மக்களுக்கான எழுத்து மூல நோடி அறிவித்தல் பொதுவான அறிவித்தல் எவையாயினும் இரண்டு அரசாங்க மொழிகளிலும் இருக்க வேண்டுமென்பதை கனடாவின் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றியது

மேலும் இந்தச் சட்டம் சட்ட சபை நடவடிக்கைகள், தீர்மானங்கள், உத்தரவுகள், சமஷ்டி பரிபாலன நீதிபரிபாலன ஸ்தாபனங்களால் நிறைவேற்றப்படும் தீர்ப்புகள், அறிவித்தல்கள், விளம்பரங்கள், திணைக்களங்களின் கருமங்கள் ஆகியன இரு மொழிகளிலும் இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது

நீதி சம்பந்தமான விசாரணைகளில் குறிப்பிட்ட நபரின் திறமையைப் பொறுத்து அரசாங்க மொழியின் தேர்வு விடப்படும். சமஷ்டி நீதி ஸ்தாபனங்களின் கருமங்கள், விசாரணைகள் மொழிபெயர்ப்புடன் ஏதாவது ஒரு அரசாங்க மொழியில் கிரிமினல் விடயங்களில் விசாரணை நடத்த அதிகாரம் உண்டு.

( திரு. K. குலரத்தினம் கொழும்பு)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10081

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை —வழக்காளி.

எதிராக

1. சொக்கலிங்கம் பூபாலசிங்கம் வேலணை கிழக்கு
2. அம்பலவாணி கைம்பெண் ஆச்சிப்பிள்ளை வேலணை.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10081 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஞு ஆடி மாதம் 8-ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 2714-24 சதம் 18-6-68 தொடக்கம் 29-4-69 வரைக்கும் ரூபா 2300-24 -க்கு 6 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 362-40.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வேலணைத்தீவு கோவில்பற்று வேலணைப் பகுதியில் உள்ள கலட்டி என்னும் நிலப்பரப்பு 11ம் 2 குளியும் அதுள் அடங்கிய வடலிகளும் பனைகளும் வேம்புகளும் இதற்கு எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் முத்துப்பிள்ளையினதும் பிள்ளைகளினதும் ஆதனம். வடக்கு ஆறுமுகம் கந்தையாவின் உருத்தாளிகளினதும் பங்காளரினதும் ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு கைஒழுங்கை. இது அடங்கலும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
தொல்புரம், மதிப்பாளரும்,
5-5-70 எம் 108 19-6-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

சரவணமுத்து சின்னத்துரை, கொக்குவில் கிழக்கு.

இல: M. B. 6669 எதிராக —வழக்காளி

1 வீரசிங்கம் தவரட்ணம் 2 பெண் ராஜேஸ்வரி கொக்குவில் கிழக்கு. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 6669ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம், 1970ம் ஞு ஆடி மாதம் 24-ம் திகதி (24-7-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக 6,540 ரூபாவும் 4,000 ரூபாவிற் 20-5-64 - 21-1-65 வரைக்கும் நூற்றுக்கு 12 வீத வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 21-1-65 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 6 வீத வட்டியும் கோட்டுச்செலவு 302-80 சதமும் (ஏற்பட்ட செலவு 191-26, வெளியாத்துச்செலவு 58-75 இனிமேலுறபடுஞ்செலவு 52-85) இதில் 1,600 ரூபா எதிரி கொடுத்ததைவிட மிகுதி.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும், பகுதியும், நல்லூர்கோவிற்பற்று கொக்குவில் மேற்கிலுள்ள 'கலைகொக்கன்' பர நில. லா. 2 குளி 16 ஆகில் 29-8-1956ம் 9517ம் இலக்கத்தில் உறுதிப்படி மேஸ்தர் C ராஜேஸ்வரியால் விற்றுக்கப்பட்ட படத்திலுள்ளபடி பர. நில. லா 2 குளி 17¾ வீடும் சுப்பர் சின்னப்புவின் காணிக்குளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் க்காணிக்குளிருக்கும் கிணறும், பயிர்களும் இந்த பர 2 குளி 17¾க்கும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சண்முகம்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு ராசா கைம்பெண் மாணிக்கத்திற்கும், சின்னையா செல்லையாவிற்குமுரியவாதனம் மேற்கு மேலே சொல்லப்பட்ட மாணிக்கமும், ஒழுங்கையும். தெற்கு கையொழுங்கை இது முழுவதும்.

பதிவு இல: E 247/183

தா. க. பொன்னுத்துரை J. P.
"அகிலகம்" கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1 யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 110 19-6-70
13-6-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

செல்லப்பா முருகேசு, அரியாலை, யாழ்ப்பாணம்.

இல: M B 7715 எதிராக —வழக்காளி

1 தம்பையா கணேசபிள்ளை
2 பெண் யோகம்மா, அரியாலை; யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 7715 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1970ம் ஆண்டு ஆடிமாதம் 30-ம்திகதி (30-7-70) வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக 3,263-75 சதமும் 2,100/-ரூபாவிற்கு 29-9-65 6-12-66 10% வட்டியும் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 6-12-66 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் 5% வட்டியுங் கோட்டுச் செலவு 421-75 சதமும் (ஏற்பட்ட செலவு 293-80, வெளியாத்துச் செலவு 77-50 இனிமேலேற்படுஞ் செலவு 50-45) தீர்வைத் தொகையில் கொடுத்த ரூபா 1150/- போக மிகுதி.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும், சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இலுள்ள "கொட்டைடபடி மேற்கு வளவு" பர. நில லா. 4 இதில் தெற்குப் புறமாக பர. நில. லா. 2, இதில் தெற்குப் புறமாக பர. நில. லா. 1½, கல் வீடும், வடக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் வான்பயிர் செய்பயிர்களும், மேற்சொல்லிய பர. நில. லா. 1½க்கு எல்லை கிழக்கு: வீரகத்தி ஆறுமுகத்தினதனமும் ஒழுங்கையும், வடக்கு இக்காணியின் மிகுதிப்பாகம், மேற்கு சதாசிவத்தின் பெண் சின்னம்மாவினதனம், தெற்கு வீரகத்தி விநாசித்தம்பிக்கும், வீரகத்தி ஆறுமுகத்திற்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்.

பதிவு இல: D. 275/48

தா. க. பொன்னுத்துரை J. P
"அகிலகம்" கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம். எம். 111 19—6—70
15—6—70

---

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ஆம் நம்பர் கடையில் திரு. கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 1ம் (1-3-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில், 15-7-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1970 ஆம் ஆண்டு யூலை (ஆடி) மாதம் 17-ஆம் திகதி (17-7-70) வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
"இராச கிரி" ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்.
643, காங்கேசன்துறைவீதி, Commissioner Sales & Valuer.
யாழ்ப்பாணம். எம் 97 12, 19-6-70

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 19—6—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

---

AUCTION SALE

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 9539

கணபதிப்பிள்ளை சோமசுந்தரம், புலோலி மேற்கு, பருத்தித்துறை. —வழக்காளி

எதிராக

சிவப்பிரகாசம் கைம்பெண் இராசபூபதி. புலோலி மேற்கு —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1970-ஆம் ஆண்டு ஆடி மாதம் 22-ம் திகதி (22-7-1970) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி மேற்கு மளவராயர் குறிச்சியிலுள்ள "பெருமியாச்சிமா" நி பர. 16. 7/8 ஷி வீடு ⅞ இவைகளிற் தெற்குப் புறமாக மூன்றிலொரு பங்கு நி பர 5 குளி 17¼ பனைகள், வடலிகளும், எல்லை: கிழக்கு - சுப்பிரமணியம் சிதம்பரநாதருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு: ஆறுமுகம் கார்த்திகேசபிள்ளைக்குடையவாதனம் மேற்கும் தெற்கும்: ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா 2390 | 00 |
| வட்டி ரூபா 1200/-க்கு 10வீத வட்டி 14-3-67 தொடக்கம் 20-12-67 வரை ,, | 92 | 00 |
| வட்டி ரூபா 2482/-க்குச் சட்டத்தின்படி 20-12-67 தொடக்கம் 24-4-70வரை அறவிடவேட்டியவட்டி ,, | 165 | 43 |
| முழுத்தொகை ரூபா | 2647 | 43 |

க. நா. சுப்பிரமணியம்
புலோலி மேற்கு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை. எம் 113 19-3-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 4865

பலாலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், பலாலி —வழக்காளி. பலாலி

எதிராக

1. கதிர்காமு ஆறுமுகம்
2. சித்தர் சின்னத்துரையும் பெண்
3. சரவணை மகள் தங்கம்மாவும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4865-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970 ம் ஞு ஆவணி மாசம் 7-ம் திகதி (7-8-70) வெள்ளிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1907/- 26-7-65 தொடக்கம் 8-7-67 வரைக்கும் ரூபா 1500 - க்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் இதில் ரூபா 1250/ கொடுபட்டது.

காணி விபரம்

1. வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திக வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இலுள்ள 'கட்டாடிப்புலம்" பர நில இலா. 12 (பன்னிரண்டு) பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு சிதம்பரம் மகள் வள்ளிக்குரிய ஆதனம், மேற்கு சின்னக்குட்டிக்கும் மறுபேருக்கும் கந்தர் வயிரவனுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு கதிரவேலு பெண் சின்னத்தங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்.

2. ஷை இலுள்ள "தனத்தன் சீமா பர நில இலா 1½ ஷை பர. நில. இலா. 1 குளி 10 இரண்டும் சேர்ந்து பர. நில. இலா. 3 குளி 1 பனைகளும் கல் வீடும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை பொன்னையாவின் உரித்தாளருக்கும் ஐயன் ஆறுமுகத்துக்கும் பெண் மீனாட்சிக்குமுரிய ஆதனம். வடக்கு சிவசப்பு சதாசிவத்தினுதனம். மேற்கு ரோட்டு. தெற்கு சுப்பர் கறுவலினுதனம். இதடங்கலும்.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நம். 35/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
5-6-70 M 107 19-6-70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ இல: M B 9401

இராமலிங்கம் சுப்பிரமணியம் அவரது மனைவி வள்ளியம்மை இருவரும், சுழிபுரம். - வழக்காளிகள்

எதிராக

ஆழ்வான் அப்பன், சுழிபுரம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B- 9401ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ம் ஞு யூலை மீ 12-ஆம் திகதி (12-7-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1978- 16-9-67 தொடக்கம் 13-7-68 வரைக்கும் ரூபா 1700/-க்கு 9 வீத வட்டியும் அதன் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 23 -84

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிமேற்குப் பிரிவு சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இலுள்ள "வீரநாரணன் கட்டியும் பாரிவளவு" நிலப்பரப்பு 5ம், குளி 3¼ம் அத்துடன் கிணறும், வான்பயிர் வளர்பயிர்களும், எல்லைகள் கிழக்கு: கை ஒழுங்கையும். மருதன் மாண்டிரவின் உரிமை ஆதனமும். அத்துடன் பங்குரிமையுடையவர்களதும், வடக்கு: பரமன் சதாசிவத்தின் ஆதனமும், மேற்கு: ஒழுங்கையும், தெற்கு கையொழுங்கையும், வைரவன் சடையனின் ஆதனமும், அத்துடன் பங்குரிமையுடையவர்களதும். பதிவு இல: E. 321/146

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்
நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை, 15-6-69.
எம். 103 19-6-70

---

## ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை தாமதமின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்.